ஆகவே அந்த அளவுக்கு நாம் அப்படித்தான் போட்டிருக்கிறோம். மேலும் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த நிலைமை வருமே யானால், நாம் தொடர்ந்து இது பற்றி கவனிக்கலாம். நம்முடைய நிதிநிலை இடம் தருமேயானால், அந்தக் கொள்கையைப் பற்றி ஆராயலாம் என்று சொன்னேனே தவிர, இப்பொழுது தருவேன் என்ற உறுதிமொழி நான் தரவில்லை என்பதையும் உறுதியாகச் சொல்கிறேன்.

திரு. எ. பாலசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இப்பொழுது பி. எ. யிலே முக்கியப் பாடமாக எக்கனமிக்ஸ், ஹிஸ்டரி எடுத்துப் படிக்கிறவர்கள் தேர்வு முடிந்தவுடனே முதல் ஆண்டிலேயே பி.டி.யில் சேர விண்ணப்பம் செய்தால், அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டாமென்று அரசு ஏதாவது "இன்ஸ்ட்டிரக்சன்ஸ்" கொடுத்திருக்கிறதா அல்லது ஆணை பிறப்பித்திருக் கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளி யிலே எந்தெந்தப் பாடப் பகுதி சொல்லிக் கொடுப்பவர்கள் தேவைப் படுகிறார்களோ அவர்களுக்குத்தான் பி.டி.யிலே பயிற்சி தரவேண்டியவர் களாக இருக்கிறோம். ஆகவே பள்ளியைப் பொறுத்த வரையிலே, ஹோம் சயன்ஸ் அல்லது எக்கனமிக்ஸ் பாடப் பகுதி இல்லாத காரணத்தினால் பி.டி.யிலே பயிற்சி பெற வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கிறது. ஏற்கெனவே அப்படித் தந்து பல்வேறு இடர்ப்பாடுகள் இருக்கிற காரணத் தினால்தான், அப்படிப்பட்டவர்களை பி.டி. பயிற்சிக்கு எடுக்க வேண்டிய அவசியமில்லாத சூழ்நிலை ஏற்படுகிறது.

Mr. CHAIRMAN : Supplementaries are becoming very long.

Present System of Education.

***133 Q.**—THIRU P.R. THOMAS (on behalf of THIRU K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state whether the Government agree with the view of the Director of Collegiate Education, who, in a meeting held at Tirunelveli, has characterised the present system of education as an " asphyxiating one " and also regretted that the present system of education was ill-planned and ill-executed and was expenditure-oriented and not programme-oriented ?

தற்போதைய கல்வி முறை

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்பு மிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

1975 மார்ச் 8]

திருநெல்வேலியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர், தற்போதைய கல்வி முறை மாணவரைத் திணரடிக்கும் வகையைச் சேர்ந்தது என்றும், அது நன்கு திட்டமிடப்பட்டதல்ல, நன்கு நிறைவேற்றப்படுவதல்ல, செலவையே அது நோக்கமாகக் கொண்டது, திட்டமிட்ட பணியை நோக்கமாகக் கொள்ளாதது என்று மேலும் அவர் வருத்தத்தோடு தெரிவித்த கருத்தை அரசு ஒப்புக் கொள்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு சிட்டிபாபு 6—9—1974 அன்று பாளையங்கோட்டை சாராடக்கர் கல்லூரி ஆண்டு விழாவில் பேசியதாகச் செய்தித் தாளில் வெளிவந்ததை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் எனத் தெரிகிறது. நம் நாட்டுக் கல்வி முறையில் கோதாரி கல்விக் குழு போன்ற வல்லுநர்க் குழுக்கள் அவ்வப்போது சொல்லி வந்துள்ள பொதுவான குறைபாடுகளைச் சொல்லி அவற்றைப் போக்க அனைவரும் முயலவேண்டும் என்றுதான் தாம் பேசியதாக அவர் விளக்கம் தெரிவித்துள்ளார். கல்வித் தரத்தை மேலும் மேலும் உயர்த்த இடைவிடாது அனைத்து மட்டங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இவ்வரசுக்கு உடன்பாடான கருத்தாகும்.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே, பள்ளிக் கல்வி முறையிலே மாறுதல் காண ஏற்கெனவே காந்தியடிகள் தயாரித்த ஆதாரக் கல்வித் திட்டம் நம் கையில் இருக்கிறது. டாக்டர் இராதாகிருஷ்ணன் கமிஷன், கோத்தாரிக் கமிஷன் கல்வியிலே மாறுதல் காண்பதற்கான திட்டங்களை விரிவாக ஆராய்ந்து பரிந்துரை செய்திருக்கின்றன. இந்தக் கமிஷன்களின் திட்டங்களை வைத்து ஒரு மாறுதல் காண்பதற்கான திட்டத்தைத் தயாரிக்க இந்த அரசு ஒரு தனிக் குழுவை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் குழுக்கள் கொடுத்த கருத்துகளிலே சிலவற்றை ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்துகிற அளவுக்கு பள்ளிகளும் கல்லூரிகளும் வந்திருக்கின்றன. இந்த அடிப்படையிலே ஆராய்வதற்காகத்தான் நாம் தமிழகத்திலே கல்விக்காக ஒரு தனித் திட்டக் குழு அமைத்து, டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்களுடைய தலைமையில் இரண்டு ஆண்டுகள் அவர்கள் ஆராய்ந்து ஒரு அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சில பல நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். மற்றும் பல நடவடிக்கைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். பல்கலைக் கழகத்திலே பாடத்திட்டங்களை மாற்றியமைக்கும் முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பள்ளிகளில் பாடத்திட்டங்களை மாற்றியமைக்கும் முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவேதான் இந்த 1-வது 3-வது வகுப்பிலிருந்துகூட அறிவியல் பாடம், கணக்குப் பாடம் ஆகியவற்றையெல்லாம் புதிய முறையிலே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற முறைகளிலே பாடத் திட்டங்களை 5-வது, 6-வது வகுப்பு வரைக்கும் மாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். 7-வது, 8-வது வகுப்புகளிலே வருகிற ஆண்டிலே மாறுதல் செய்யப்படும். பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களிலும் பல்வேறு மாறுதல்

களைப் பல்கலைக் கழகம் கொண்டு வந்திருக்கிறது. மேலும் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா இந்த அறிக்கைகளையெல்லாம் பார்த்து கொடுத்த அறிக்கையின் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கான குறிப்புகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் கல்வித் துறையிலே செய்ய வேண்டிய சீர்திருத்தம் பற்றிச் சொல்லியிருப்பதாக கல்வி அமைச்சர் சொன்னார். அவர்கள் 6வது வகுப்பிலிருந்து 8-வது வகுப்பு வரையில் இருக்கிற வகுப்புகளை செகண்டரி கிரேட் ஆசிரியர்களின்றி பி.டி. படித்தவர்கள்தான் நடத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

Apprentice Secondary Grade Teachers.

*134 Q.—Thiru P.R. THOMAS (on behalf of Thiru K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) the number of Apprentice Secondary Grade Teachers appointed after 1—6—1972, in the Tiruchirappalli Revenue District;

(*b*) the number of cases where teaching grant has not been granted ; and

(*c*) the number of cases wherein the Director of Schoo Education has ordered payment of salary to such teachers, appo inted on or after 1—6—1972?

தொழில் பழகு இடைநிலை ஆசிரியர்கள்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்தில் 1—6—1972ஆம் நாளுக்குப் பிறகு நியமிக்கப்பட்ட தொழில் பழகு இடைநிலை ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) கற்பித்தல் மாணியம் வழங்கப்படாத பள்ளிகள் எத்தனை?